# 12. நடுவு நிலைமை

111. *தகுதி யெனவொன்று நன்றே பகுதியாற்*
*பாற்பட் டொழுகப் பெறின்*

**தகுதியைப் பிரித்துப் பார்த்து – ஒரு**
**தலைச் சார்பாக நிற்காமல் இருத்தலே**
**தகுந்த “நடுநிலை” ஆகும் !**

112. *செப்பம் உடையவன் ஆக்கஞ் சிதைவின்றி*
*எச்சத்திற் கேமாப் புடைத்து*

**“நடுவுநிலை”யை பின்பற்றும் நேர்மையாளரின்**
**நற்செல்வத்திற்கு என்றும் அழிவில்லை ! – அது**
**நயந்து வழிவழி தலைமுறையினருக்கும்**
**நன்மை பயக்கும் !**

113. *நன்றே தரினும் நடுவிகந்தாம் ஆக்கத்தை*
*அன்றே யொழிய விடல்*

**நடுநிலை தவறுவதால் கிடைக்கும் பலன்**
**நமக்கு நன்மையே தரக்கூடியதானாலும்**
**நிலை தடுமாறாமல் நடுநிலையைத்தான்**
**நிச்சயமாகக் கடைப்பிடிக்க வேண்டும் !**

114. *தக்கார் தகவிலர் என்ப தவரவர்*
*எச்சத்தாற் காணப் படும்*

**நெறி வழி நடந்தவரா அல்லது**
**நெறி தவறி நடந்தவரா என்பதை அவரின்**
**நெடிய வாழ்வுக்குப் பின் எஞ்சி நிற்கும்**
**நெடுஞ்சொல்லான புகழோ – பழியோ கூறும் !**

115. *கேடும் பெருக்கமும் இல்லல்ல நெஞ்சத்துக்*
*கோடாமை சான்றோர்க் கணி*

**அழிவும் ஆக்கமும் வாழ்வும் தாழ்வும்**
**அகண்ட உலகில் இயற்கை !**
**அந்த இரு நிலைமையிலும் நடுநிலை வகிப்பதே**
**அறிவுடையோர்க்கு அழகு !**

116. *கெடுவல்யான் என்ப தறிகதன் நெஞ்சம்*
*நடுவொரீஇ அல்ல செயின்*

**மனம் நடு நிலையிலிருந்து நிலை தடுமாறி**
**மருகி தவறு செய்வதற்கு**
**மனதால் நினைத்து விட்டாலே – அவன்**
**மதிமயங்கி கெட்டொழியப்போவது தெரிய வேண்டும் !**

117. *கெடுவாக வையா துலகம் நடுவாக*
*நன்றிக்கண் தங்கியான் தாழ்வு*

**அறநெறி நின்று நடுநிலை தவறாமல்**
**அடிப்படை வாழ்க்கை முறையால்**
**அடைகின்ற வறுமை நிலையை "கேட்டின்"**
**அடையாளமாய் உலகம் கொள்ளாது !**

118. *சமன்செய்து சீர்தூக்குங் கோல்போல் அமைந்தொருபாற்*
*கோடாமை சான்றோர்க் கணி*

**சமமாக இருந்து பொருளை**
**சரியாக எடைபோடும் துலாபாரம் போல்**
**சமரசமான நியாயம் கூறுவது தான்**
**சான்றோர்களுக்கு அழகாகும் !**

119. *சொற்கோட்டம் இல்லது செப்பம் ஒருதலையா*
*உட்கோட்டம் இன்மை பெறின்*

**நெஞ்சத்தில் நேர்மை உறுதி கொண்டால்**
**நெடுஞ்சொல்லில் நீதி இருக்கும் ! இந்த**
**நெறியே "நடுவு நிலைமை" யாம் !**

120. *வாணிகம் செய்வார்க்கு வாணிகம் பேணிப்*
*பிறவும் தமபோல் செயின்*

**வணிக நெறி என்பது பிறர்**
**வசம் கொண்ட பொருளையும் தன்**
**வசம் உள்ள பொருளாக கருதி**
**வணிகத்தை நேர்மையாக நடத்துவதே !**